DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.32/2025**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Krishnamoorthy | Caste | : | |
| Father Name | : | Kari | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 46 |
| Time | : | | | | |

**(Accused present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **01.06.2026**

**01.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது மணியட்டியில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். 12.01.2025ம் தேதியில் குன்னூர் பணிமனையிலிருந்து சோகத்திரை செல்வதற்காக பேருந்தை எடுத்து தற்காலிக நடத்துநர் நித்திஷ் உடன் சென்றேன். சோகத்திரை சென்றுவிட்டு திரும்ப வரும் போது பழத்தோட்டம் தாண்டி வரும் போது எனக்கு பின்னால் வந்துகொண்டிருந்த ஒருவர் ஹாரன் அடித்தார். உபதலை ஜங்சனுக்கு எங்கள் பஸ் வந்து நின்றவுடன் பின்னால் வந்தவர் அவரது இருசக்கர வாகனத்தை குறுக்காக நிறுத்திவிட்டார். அப்போது மதியம் 2 அல்லது 02.30 மணி இருக்கும்.

2. அந்த நபர் மதுபோதையில் இருந்தார். எங்களிடம் தகராறு செய்தார். என்னிடம் தகராறு செய்தவர் சாவியை வைத்து எனது நெற்றியில் அடித்தார். அதில் எனது நெற்றியில் காயம் ஏற்பட்டது. என்னை அடித்த நபரை அப்போது சரியாக பார்க்கவில்லை. ஆஜர் எதிரி சம்பவயிடத்தில் இருந்தாரா என எனக்கு தற்போது ஞாபகமில்லை. அங்கு இருந்த பொதுமக்கள் போலிஸ்க்கு போன் செய்தார்கள். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். அதற்கு பின்பு என்னை குன்னூர் அரசு மருத்துவமனைக்கு பணிமனையிலிருந்து வந்த ஒருவர்

சிகிச்சைக்கு அழைத்து சென்றார். நான் அரசு மருத்துவமனையில் மூன்று நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அப்போது போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான் (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.